[1979 மார்ச் 13

*வினா எண் 379—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் மகப்பேறு பிரிவில் தேவையான அளவு கட்டில்களை அதிகரிக்க உத்தேசம் உண்டா?

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

இல்லை.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே போட்ட கேள்வியைத்தான் மீண்டும் போடுகிறேன். அங்கே கோவையில் ஒரு ஆக்சிடென்ட் யூனிட் ஏற்படுத்தப்பட்டு, 32 படுக்கைகளும் தயார் செய்யப்பட்டு, எக்ஸ்ரே மிஷின்கள் புதிதாக வாங்கி வைக்கப்பெற்று, டாக்டர்கள் இருந்தும் ஸ்டாப்கள் இல்லாததால் வேலை செய்யாமல் இருக்கிற நிலையை மாற்றி உடனடியாக அங்கே வேலை துவங்க ஸ்டாப் சாங்ஷன் செய்ய அரசு முன்வருமா?

(முற்பகல் 10.00)

திரு. இரா. அருணாசலம் (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் தலைக் காயங்களுக்கு மட்டும் சிகிச்சை அளிக்க விசேஷ பிரிவு எதுவும் இதுவரையில் ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் பொதுவாக விபத்துக்களில் பாதிக்கப்படுகிறவர்களுக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க 30 படுக்கைகள் வசதி கொண்ட விபத்து சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைக் காயங்கள் உட்பட இதில் அடங்கும். இந்த விபத்துப் பிரிவில் நியமிக்கப்படும் வல்லுநர்கள், அவர்கள் பொதுவாக பட்ட மேல்படிப்புப் படிக்கும்போதே தலைக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்கவும் போதிய பயிற்சி பெறுகின்றார்கள். ஆகவே, அங்கே தலைக் காயங்களுக்கு சிகிச்சை அளிக்க ஆதார வசதிகள் இல்லை என்ற குறைபாடு இருக்கிறதே தவிர, வேறு குறைபாடு எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஒரு உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. ஒழுங்குப் பிரச்சினை

### சம்பந்தப்பட்ட அமைச்சர் இருக்கும்போது அவரது பேரவைச் செயலர் பதிலளிப்பது குறித்து.

திரு. சி. ஆறுமுகம்: சார், பாயின்ட் ஆப் ஆர்டர், அமைச்சர் இருக்கும்போது அவருடைய செயலாளர் பதில் சொல்லலாமா? அப்படிப் பதில் சொல்ல விதி இருக்கிறதா?